**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

ஜனவரி – பிப்ரவரி 2021

**A011 காப்பிய இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சங்க இலக்கியப் பாடல்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
2. இரட்டைக் காப்பியங்கள் எவை?
3. சீவக சிந்தாமணிக்கு வழங்கப்படும் வேறு பெயர் யாது?
4. மணிமேகலையில் இடம்பெற்றுள்ள துறவி யார்?
5. 'சிந்தாமணியிலிருந்து ஓர் அகப்பை முகந்து கொண்டேன்' யார் கூறியது?
6. சூளாமணியின் ஆசிரியர் யார்?
7. பெருங்கதையின் சுருக்க நூல் (காப்பியம்) எது?
8. பெரிய புராணத்தின் வேறு பெயர் யாது?
9. கம்பர் தமது காப்பியத்திற்கு இட்ட பெயர் யாது?
10. வில்லிபாரதத்தின் ஆசிரியர் யார்?
11. தேம்பாவணியின் கதைத்தலைவன் யார்?
12. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் யார்?
13. இராவண காவியத்தின் ஆசிரியர் யார்?
14. அகலிகை வெண்பாவின் ஆசிரியர் யார்?
15. 'வீராயி' குறுங்காவியத்தின் ஆசிரியர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. சிலப்பதிகாரத்தில் எத்தனை காண்டங்கள் உள்ளன? அவை யாவை?
2. ஐஞ்சிறு காப்பியங்கள் எவை?
3. கம்பரின் சிறப்பினைக் கூறும் சொற்றொடர்கள் எவை?
4. சீறாப்புராணத்தில் எத்தனை காண்டங்கள்? அவை யாவை?
5. 20 ஆம் நூற்றாண்டுக் காப்பியங்களில் சிலவற்றைக் குறிப்பிடுக.
6. 'பூங்கொடி' காப்பியம் குறித்து சிறுகுறிப்பு தருக.
7. 'அகல்யா' எத்தனை பகுதிகளாக அமைந்துள்ளது? அவை யாவை?
8. பெண்ணியம் போற்றிய 20 ஆம் நூற்றாண்டுக் குறுங்காப்பியங்கள் எவை? ஏன்?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) ஐம்பெருங்காப்பியங்கள் காப்பிய இலக்கணத்துத்திற்கு உட்பட்டன என்பதை நிறுவுக.

(அல்லது)

(ஆ) 'காப்பியச்சுவை மிக்க காவியம் கம்பராமாயணம்' என்பதைச் சான்று தந்து விளக்குக.

2. (அ) வீரமா முனிவரின் வாழ்வும் பணியும் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) இசுலாமிய இரட்டைக் காப்பியங்கள் குறித்து விவரி?

3. (அ) புலவர் குழந்தையின் இராவண காவியத்தைத் திறனாய்வு செய்க.

(அல்லது)

(ஆ) 'பெண்ணியக் காவியம் வீராயி' – நிறுவுக.

***